بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 30/10/2020 அன்று இலண்டனிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

## ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி), ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி) ஆகியோரைப் பற்றிய நற்குறிப்பு

أَشۡهَدُ أَنۡ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحۡدَهٗ لَا شَرِيۡكَ لَهٗ وَأَشۡهَدُ أَنَّ مُحَمَّدًا عَبۡدُهٗ وَرَسُوۡلُهٗ- أَمَّا بَعۡدُ فَأَعُوۡذُ بِاللّٰهِ مِنَ الشَّيۡطٰنِ الرَّجِيۡمِ- بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰهِ رَبِّ الۡعٰلَمِيۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ﴿۳﴾ مٰلِكِ يَوۡمِ الدِّيۡنِ ﴿۴﴾ إِيَّاكَ نَعۡبُدُ وَإِيَّاكَ نَسۡتَعِيۡنُ ﴿۵﴾ اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِيۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيۡنَ أَنۡعَمۡتَ عَلَيۡهِمۡ ۬ۙ غَيۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَيۡهِمۡ وَلَا الضَّآلِّيۡنَ ﴿۷﴾

ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு சென்று கொண்டிருந்தது. ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்கள் மிகவும் வள்ளலாக இருந்தார்கள். அதன் காரணமாக அவர்களுக்கு பெரும்பாலும் கடன் வாங்க வேண்டி வந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இவர்களின் சொத்துக்கள் அனைத்தையும் கடன் கொடுத்தவர்கள் மத்தியில் விநியோகித்து விட்டார்கள். ஆனால் அப்போதும் கடன் முழுமையாக தீரவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இவர்களை யமன் நாட்டுக்கு அனுப்பி வைத்தவாறு கூறினார்கள்: “முஆஸே! உம்மீது அதிகமாக கடன் இருக்கிறது. யாராவது அன்பளிப்பு கொண்டு வந்தால் அதை ஏற்றுக்கொள்ளும். நான் உமக்கு அதற்கு அனுமதி அளிக்கிறேன். அந்த அன்பளிப்பை நீர் உமக்காக செலவழித்துக் கொள்ளலாம்.”

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “முஆஸே! அடுத்த வருடம் நீர் என்னை சந்திக்க முடியாமல் போகலாம். நீர் எனது பள்ளிவாசலையும் கபரையும் கடந்து போகலாம்.” ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட்டுப் பிரிவதன் காரணமாக இதைக் கேட்டு கதறி அழ ஆரம்பித்தார்கள். பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வேறுபுறம் திரும்பினார்கள். மதீனாவை நோக்கி அருளுக்குரிய முகத்தை திருப்பியவாறு, “**மக்களில் இறையச்சமுடையவர்கள் எனக்கு அருகில் இருக்கிறார்கள். அவர்கள் யாராக இருந்தாலும் சரி! எங்கிருந்தாலும் சரி!**” எனக் கூறினார்கள்.

ஒரு அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. **ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்களிடம் அந்தச் சந்தர்ப்பத்தில், அநீதியிழைக்கப்பட்டவரின் முறையீட்டிலிருந்து தப்பிக்குமாறு குறிப்பாக அறிவுறுத்தினார்கள். ஏனெனில் அவருடைய முறையீட்டுக் குரலுக்கும் அல்லாஹ்வுக்கும் இடையில் எந்த தடையும் இருப்பதில்லை.**

ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் யமன் நாட்டுக்கு காஸியாக நியமித்து அனுப்பினார்கள். அவர்கள் அந்த மக்களுக்கு திருக்குர்ஆனையும் மார்க்கத்தையும் கற்றுக் கொடுத்து வந்தார்கள்; அவர்களுக்கு மத்தியில் தீர்ப்பளித்து வந்தார்கள். ஸகாத்தை சேகரித்து வந்த யமன் நாட்டு பொறுப்பாளர்கள் அவற்றை ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்களுக்கு அனுப்பி வந்தார்கள்.

ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்கள் யமன் நாட்டில் பைத்துல் மாலின் செல்வத்தால் வாணிபம் செய்தார்கள். அதன் மூலமாக வந்த இலாபத்தில் தனது கடனை செலுத்தினார்கள்.

**அல்லாஹ்வின் செல்வத்தால் வாணிபம் செய்த முதல் நபர் அவர்கள் தான்.** ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்கள் யமன் நாட்டில் இருக்கும்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணம் நிகழ்ந்தது.

ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவர்களை யமன் நாட்டுக்கு அனுப்பிய போது, உங்களுக்கு முன் ஏதும் விவகாரம் வந்தால் நீங்கள் எவ்வாறு தீர்ப்பளிப்பீர்கள் என்று கேட்டார்கள். இவர்கள் கூறினார்கள். நான் அல்லாஹ்வின் மறையிலிருந்து தீர்ப்பளிப்பேன். அல்லாஹ்வின் மறையில் அதற்கான கட்டளை கிடைக்கவில்லையென்றால் என்ன செய்வீர்கள்? என்று கேட்டார்கள். இவர்கள் கூறினார்கள்: பிறகு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் நடைமுறைக்கேற்ப தீர்ப்பளிப்பேன். அல்லாஹ்வின் தூதரின் நடைமுறையிலும் அதற்கான கட்டளை கிடைக்கவில்லையென்றால் என்ன செய்வீர்கள்? என்று கேட்டார்கள். இவர்கள் கூறினார்கள்: பிறகு நான் எனது அறிவால் முயற்சித்து எனது கருத்தை நிலைநாட்டுவேன். நான் அதில் எந்த அலட்சியமும் காட்டமாட்டேன்.

ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: இந்த விஷயங்களைக் கேட்டு விட்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எனது நெஞ்சில் தட்டினார்கள். பிறகு கூறினார்கள். எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! அவன் தனது தூதரின் தூதுவருக்கு இத்தகைய விஷயத்துக்கு நல்வாய்ப்பு தந்தான். அது அவனது தூதரின் தன்னிறைவுக்கு காரணமானது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்களை யமன் நாட்டுக்கு ஆட்சியாளராக அனுப்பினார்கள். மேலும் யமன் நாட்டு மக்களுக்கு இவ்வாறு எழுதினார்கள். “நிச்சயமாக நான் உங்கள் மீது எனது மக்களில் சிறந்தவரை, அறிவுடையவரை, மார்க்கமுள்ளவரை ஆட்சியாளராக்கியுள்ளேன்.”

**ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எனக்கு பத்து விஷயங்களை வலியுறுத்திவாறு கூறினார்கள். அல்லாஹ்வோடு யாரையும் இணை வைக்காதீர்கள். நீங்கள் கொல்லப்பட்டாலும் சரி! எரிக்கப்பட்டாலும் சரி! பெற்றோருக்கு கட்டுப்படாமல் இருக்கக்கூடாது. அவர்கள் உங்களுக்கு சொத்துக்கள் மற்றும் செல்வத்தை தரவில்லை என்றாலும் சரி! கடமையான தொழுகைகளை வேண்டுமென்றே விடாதீர்கள். ஏனெனில் வேண்டுமென்றே கடமையான தொழுகைகளை விடுபவர் அல்லாஹ்வின் பொறுப்பிலிருந்தும், பாதுகாப்பிலிருந்தும் வெளியேறி விடுகிறார். மது அருந்தாதீர்கள். ஏனெனில் மது எல்லா வெட்கக் கேடுகளின் வேர் ஆகும். பாவம் மற்றும் கட்டுப்படாமையிலிருந்து தப்பித்துக் கொள்ளுங்கள். ஏனெனில் பாவத்தின் காரணமாக இறைவனின் கோபம் இறங்குகிறது. பகைவரை நேருக்கு நேர் சந்திக்கும் தருணத்தில் ஓடி விடாதீர்கள். மக்கள் பிளேக்கைப் போன்ற கொள்ளை நோய்க்கு இறையாகி விட்டால், நீங்கள் அவர்களுக்கு மத்தியில் இருந்தால், உங்கள் இடத்திலேயே இருங்கள். உங்கள் மனைவி மக்கள் மீது உங்களது சக்திக்கேற்ப செலவு செய்யுங்கள். அவர்களின் உரிமையை நிறைவேற்றுங்கள். அவர்களுக்கு பண்பு கற்பிப்பதிலும், தர்பிய்யத் வழங்குவதிலும் அலட்சியம் காட்டாதீர்கள். அவர்களுக்கு இறைவனைப் பற்றிய அச்சத்தை நினைவூட்டி வாருங்கள்.** இந்த 10 விஷயத்தை அன்னார் அவர்களுக்கு கூறினார்கள்.

ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்களிடம் கூறினார்கள். முஆஸே! நான் உமக்கு பரிவுள்ள சகோதரர் அறிவுரை வழங்குவது போல் அறிவுரை வழங்குகிறேன். அதை நீங்கள் மேற்கொள்ளுங்கள். நோயாளிகளை நலம் விசாரியுங்கள். விதவைகள் மற்றும் பலவீனமானவர்களின் தேவைகளை நிறைவேற்றுமாறும், தேவையுடையவர்கள் மற்றும் மிஸ்கீன்களுடன் அமர்வதற்கும், மக்களுக்கு உங்கள் சார்பாக நியாயத்தை வழங்குவதற்கும்,

உண்மையைப் பேசுவதற்கும் மேலும் அல்லாஹ்வின் விவகாரத்தில் எந்தக் குற்றச்சாட்டக்கூடியவரின் குற்றஞ்சாட்டுதலும் உங்களுக்குத் தடையாக வர வேண்டாம் என்ற இந்த விஷயத்துக்கு உங்களுக்கு அறிவுரை கூறுகிறேன்.

ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்கள் ஹிஜ்ரி 9 லிருந்து ஹிஜ்ரி 11 வரை யமன் நாட்டில் இருந்தார்கள். **ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: எனது மரணத்தருவாய் நெருங்கி, அபூ உபைதா பின் ஜர்ராஹ் (ரலி) அவர்கள் மரணித்து விட்டிருந்தால், ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்களை எனது கலீஃபாவாக நியமித்து விடுவேன். எனது கண்ணியத்திற்குரிய மேன்மைமிகு இறைவன் என்னிடம், நீ அவரை ஏன் கலீஃபாவாக நியமித்தாய் என்று கேட்டால், நான் கூறுவேன்; நான் உனது தூதர் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறக் கேட்டுள்ளேன். ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்கள் கியாமத் நாளன்று அறிஞர்களில் முன்னால் கொண்டு வரப்படுவார்கள்.**

ஆபூ இத்ரீஸ் கவ்லானி அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூற நான் கேட்டுள்ளேன். கண்ணியத்திற்குரிய மேன்மைமிகு அல்லாஹ் இவ்வாறு கூறினான்: எனக்காக பரஸ்பரம் நேசிப்பவர்கள், எனக்காக பரஸ்பரம் அமரக்கூடியவர்கள், எனக்காக பரஸ்பரம் சந்திக்கக் கூடியவர்கள் மற்றும் எனக்காக பரஸ்பரம் செலவு செய்பவர்கள் ஆகியோருக்காக எனது அன்பு கடமையாகி விட்டது.

ஹஸ்ரத் அபூ உபைதா அவர்கள் பிளேக் நோயால் மரணித்தபோது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்களை சிரியாவுக்கு பொறுப்பாளராக நியமித்தார்கள். ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்களும் அதே வருடம் அதே பிளேக் நோயால் வஃபாத்தானார்கள்.

கஸீர் பின் முர்ரா அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்கள் தாம் நோயுற்றிருந்த காலத்தில் எங்களிடம் கூறினார்கள். நான் நபி (ஸல்) அவர்களிடமிருந்து ஒரு விஷயத்தை கேட்டேன். அதை நான் உங்களிடமிருந்து மறைத்து வைத்திருந்தேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். எவருடைய கடைசி கூற்று ‘லா இலாஹ இல்லல்லாஹ்’ என்று இருக்கிறதோ அவருக்கு சொர்க்கம் கடமையாகி விட்டது.

ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்களின் வஃபாத் நேரம் நெருங்கிய போது, அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வே! நான் உனக்கு அஞ்சுகிறேன் என்பதை நீ அறிவாய். ஆனால் இன்று நான் முழு நம்பிக்கையுடன் இருக்கிறேன். நான் உலகத்தையும் நீண்ட வாழ்வையும் அதில் நதிகள் தோண்ட வேண்டும்; மரங்களை நட வேண்டும் என்பதற்காக நேசிப்பதில்லை. மாறாக மதிய வேளையின் தாகம் மற்றும் நிலைமைகளின் சிரமங்களை சகித்துக் கொள்ள வேண்டும். மேலும் உனது குறிப்பு எடுத்துரைக்கப்படும் அந்த அறிஞர்களுடன் அமர வேண்டும்.

பிறிதோர் அறிவிப்பில் வருகிறது. **ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்களின் மரணத்தருவாய் நெருங்கிய போது அவர்கள் அழ ஆரம்பித்தார்கள். நீங்கள் ஏன் அழுகிறீர்கள்? நீங்கள்தான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் தோழர் ஆயிற்றே! என்று அவரிடம் கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள் கூறினார்கள். நான் மரணிக்கப் போகும் வேதனையால் அழவில்லை. அல்லது உலகை விட்டுச் செல்வதாலும் அழவில்லை. மாறாக நான் ஏன் அழுகிறேன் என்றால், இரண்டு பிரிவுகள் இருப்பர். அதாவது சொர்க்கவாசிகள் மற்றும் நரகவாசிகள். நான் எந்தப் பிரிவில் எழுப்பப்படுவேன் என்று எனக்கு தெரியாது.**

ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்கள் ஹிஜ்ரி 18 ஆம் ஆண்டில் வஃபாத்தானார்கள். அவருடைய வயது 38 என்று கூறப்பட்டுள்ளது. 157 ஹதீஸுகள் அவர்களிடமிருந்து அறிவிக்கப்பட்டுள்ளன.

**அடுத்து எடுத்துக் கூறப் போகின்ற சஹாபி ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி) ஆவார்கள்.** ஹஸ்ரத் அப்துல்லாஹ் அவர்கள் அன்ஸார்களின் கஸ்ரஜ் கோத்திரத்தின் கிளைக் கோத்திரமான பனூ சலமாவைச் சார்ந்தவர்கள். அவர்கள் ஜாபிர் பின் அப்துல்லாஹ் அவர்களின் தந்தை ஆவார்கள். அவர்கள் இரண்டாவது பைஅத்தே அகபாவில் கலந்து கொண்டார்கள். **ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் நியமிக்கப்பட்டிருந்த 12 கண்காணிப்பாளர்களில் ஒருவராக இருந்தார்கள். அவர்கள் பத்ர் யுத்தத்தில் கலந்து கொண்டார்கள். உஹது யுத்தத்தில் ஷஹீதானார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி) அவர்கள் உஹது யுத்தத்தில் முஸ்லிம்கள் சார்பாக முதல் ஷஹீது ஆவார்கள்.**

உஹது யுத்தத்தின்போது மதீனாவின் நயவஞ்சகர்களின் தலைவனான அப்துல்லாஹ் பின் உபை பின் ஸலூல் நம்பிக்கை துரோகம் செய்த போது, ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அமர் அவர்கள் அம்மக்களுக்கு அறிவுரை கூற முயன்றார்கள்.

ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: எனது தந்தையார் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி) அவர்களும் எனது மாமாவும் (தாயின் சகோதரர்) உஹது யுத்தத்தில் ஷஹீதாகி விட்டார்கள். அப்போது எனது தாயார் அவர்கள், பிறிதோர் அறிவிப்பில் மாமி (தந்தையின் சகோதரி) என்று வருகிறது; இவர் ஹஸ்ரத் அம்ர் பின் ஜமூஹ் (ரலி) அவர்களின் துணைவி ஆவார்கள். அவர்கள் இவர்கள் இருவரையும் ஒட்டகத்தில் வைத்து மதீனா கொண்டு வந்து கொண்டிருந்தார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அறிவிப்பாளர், இறந்தவர்களை அவர்கள் சண்டையிட்ட இடத்திலேயே அடக்கம் செய்யுங்கள் என்று அறிவித்தார். இதைக் கேட்டு அவர்கள் இருவரும் திரும்ப எடுத்துச் செல்லப்பட்டனர். அவர்கள் சண்டையிட்ட இடத்திலேயே அடக்கம் செய்யப்பட்டார்கள்.

ஓர் அறிவிப்பில் உள்ளது. ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி) அவர்கள் உஹது யுத்தத்திற்காக புறப்பட எண்ணியபோது, தமது மகன் ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்களை அழைத்தார்கள். அவர்களிடம் கூறினார்கள்: எனது மகனே! நான் ஷஹீதுகளில் முதலாவதாக இருக்கப் போவதாக பார்க்கிறேன். அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் எனக்குப் பின்னால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு அதிக நேசத்திற்குரியவராக, உன்னைத்தவிர வேறு யாரையும் விட்டுச் செல்லவில்லை. எனது பொறுப்பில் சில கடன்கள் உள்ளன. எனது அந்தக் கடன்களை என் சார்பாக அடைத்துவிடு. மேலும் நான் உனக்கு, உனது சகோதரிகளுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுமாறு வலியுறுத்திக் கூறுகிறேன். ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். அடுத்த நாள் காலையில் எனது தந்தையார் எல்லாருக்கும் முன் முதலாவதாக ஷஹீதானார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உஹதின் ஷஹீதுகளை அடக்கம் செய்வதற்காக வருகை தந்தபோது, அன்னார் (ஸல்) கூறினார்கள்: ‘‘அவர்களை அவர்களின் காயங்களோடே கஃபனிடுங்கள். ஏனெனில் நான் அவர்களுக்கு சாட்சியாளராக உள்ளேன். அல்லாஹ்வின் வழியில் காயப்படுத்தப்பட்ட எந்தவொரு முஸ்லிமும் கியாமத் நாளன்று தனது இரத்தம் சிந்த, அது மஞ்சள் நிறத்தில் இருக்க, அதன் மணம் கஸ்தூரியின் மணமாக இருக்காமல் வரமாட்டார்.’’

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘‘அப்துல்லாஹ் பின் அம்ர் மற்றும் அப்துல்லாஹ் பின் ஜமூஹ் ஆகிய இருவரையும் ஒரே கபரில் அடக்கம் செய்து விடுங்கள். ஏனெனில் இவர்களுக்கு மத்தியில் கலப்பற்ற தன்மையும் அன்பும் இருந்தது.’’

மீதம் உள்ள இவர்களின் குறிப்பை இனிவருங்காலத்தில் எடுத்துரைப்பேன். இன்ஷாஅல்லாஹ்.

*(தமிழாக்கம்: மவ்லவி அதாவுல் முக்னீ)*